


புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் கோவில்பட்டி அய்யனார் திடலில் நடைபெற்ற திரைப்பட பின்னணி பாடகர்கள் கலைமாமணி மாலதி, முகேஷ், செந்தில் தாஸ் பங்கேற்ற கலைஞர் அவர்கள் தொடர்புடைய திரைப்பட பாடல்கள் மற்றும் இன்னிசை பாடல்கள் நிகழ்ச்சியான "கலைஞர் 102 பாட்டு மன்றம் நிகழ்ச்சியை கழக இளைஞரணி துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான என்.இளையராஜா தொடங்கி வைத்தார். நிகழ்வில் புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் பி.ராஜேஸ்வரி க. மதியழகன், எஸ்.எஸ். கருப்பையா, மாநகர துணை மேயர், செ.அசோக் பாண்டியன், எம்.லியாகத் அலி, தென்னலூர் எம்.பழனியப்பன், தவ. பாஞ்சாலன், எம்.எம்.பாலு உள்ளிட்ட மாநில மாவட்ட மாநகர ஒன்றிய பேரூர் வட்ட கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு ரசித்தனர். முன்னதாக புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் முக.ராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் செ. அடைக்கலம் நன்றி கூறினார்.




தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள், செம்மொழி நாளை முன்னிட்டு மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் ஏற்பாட்டில் கும்பகோணம் மாநகர பகுதிகளில் ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்களுக்கு சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர்.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை- ஒன்றிய - நகர - பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

DMK

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்-ப.அன்பரசு B.Com.,

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்- ஆ.புஷ்பராஜ் ,(வானூர் களப்பணி), ஏ.மக்களன்பன்,(விழுப்புரம் களப்பணி), இ.ரமீஸ்ராஜா (சமூகவலைத்தளம்),திருமதி. பி.சசிரேகா (மகளிர்)

**விழுப்புரம் சட்டமன்ற தொகுதி**

விழுப்புரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்: களப்பணி -வி.ஆனந்தராஜ்,சமூக வலைத்தளம்-சே.குருராமலிங்கம்,மகளிர் - திருமதி. S.மகாலட்சுமி

விழுப்புரம்கிழக்கு நகர ஒருங்கிணைப்பாளர்கள்: களப்பணி-பா.சுந்தரவேல், சமூக வலைத்தளம் - மு.சிதம்பரநாதன்மகளிர் - திருமதி.பா.கோமதி

விழுப்புரம்மேற்குநகர ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -கு.அபுபக்கர்,சமூகவலைத்தளம், ப.ஜெயபிரகாஷ்,மகளிர்- செல்வி. ரா.சுசீலா

வளவனூர்பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:

களப்பணி -உ.ராஜேஷ்,சமூகவலைத்தளம் உ.ஹரிபிரசாத்,மகளிர்-திருமதி.க.சசிகலா

கோலியனூர் கிழக்கு ஒன்றியஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-மோ.எடிட்ராஜ், சமூகவலைத்தளம்- ரா.மோகன் பிரசாத்,மகளிர் திருமதி.A.கோமளா

கோலியனூர் மத்தியஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -நா.பிரகாஷ், சமூகவலைத் தளம்-ரா.ராஜேஷ்,மகளிர் - திருமதி.உமாராணி

கோலியனூர் தெற்குஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆ.பழனி வேல்,சமூக வலைத்தளம்அ.அகிலன், மகளிர் -திருமதி.செல்வி ராமதாஸ்

கண்டமங்கலம்மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ம.செல்வகுமரன், சமூக வலைத்தளம்அ.தயாநிதி, மகளிர் திருமதி.P.செல்வமேரி

காணை கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -S.V.எழில் ராஜா,சமூக வலைத்தளம்ரா.பெனடிக் வில்லியம்,மகளிர் -திருமதி.J.மஞ்சு

**வானூர் சட்டமன்ற தொகுதி**

வானூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -தெ.விஜயகுமார், சமூக வலைத்தளம்-B.வீரமணிகண்டன், மகளிர்- திருமதி.சி.ராதிகா

கோட்டகுப்பம்நகரஒருங்கிணைப்பாளர்கள்:களப் பணி- இ.ஜாகீர் உசேன்,சமூக வலைத்தளம்MRK.ராஜா,மகளிர்-திருமதி. ரோஜா பானு

கிளியனூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஏ.கிருபாகரன், சமூக வலைத்தளம்-வ.அருள்குமார்,மகளிர் -திருமதி.A.கமலா

கிளியனூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-கி.பிரசாத், சமூக வலைத்தளம் மா.அஜீத்குமார்,மகளிர்- திருமதி.விஜயலட்சுமி

வானூர்கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆ.அருண், சமூக வலைத்தளம்சே.பாலாஜி, மகளிர்-திருமதி. M.ஜீவிதா

வானூர்மேற்குஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -சே.சேதுநாதன்,சமூக வலைத்தளம்ரா.பூபாலன்,மகளிர்-திருமதி. R.பத்மஸ்ரீ

வானூர்மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -மோ.மோனிஷ்,சமூக வலைத்தளம்கு.பிரதீப்,மகளிர்-திருமதி.K.சுதா

கண்டமங்கலம் மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -பூ.ராமதாஸ்,சமூகவலைத்தளம்பா.அரவிந்தன், மகளிர்-திருமதி.K.ஜெயந்தி கண்டமங்கலம் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -மு.ரமேஷ்,சமூகவலைத்தளம் -ரா.ராமு,மகளிர் - திருமதி.சுபலட்சுமி

கண்டமங்கலம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-R.சந்திரசேகரன்,சமூகவலைத்தளம் -கா.ராஜேஷ் கண்ணன்,மகளிர் -திருமதி.R.ஜீவஜோதி

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் :இரா.கிருஷ்ணராஜ் B.A.DTEd

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் :NKV.நாராயணமூர்த்தி,(திருக்கோவிலூர் களப்பணி),எஸ்.விக்னேஷ் (விக்கிரவாண்டி களப்பணி),அ.கதிரவன் (சமூகவலைதளம்),திருமதி.நா.மூகாம்பிகை (மகளிர்),

**விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி**

விக்கிரவாண்டி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆர்.சுந்தர், சமூக வலைத்தளம் -ப.பவித்ரன்,மகளிர் - திருமதி. எம்.வனிதா

விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஏ.கபிலன், சமூக வலைத்தளம்-இ.எழிலரசன்,மகளிர் - செல்வி.எஸ்.பிரியா

விக்கிரவாண்டி மத்தியம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- ச.சாததிவாகர், சமூகவலைதளம்- பா.புஷ்பராஜ், மகளிர் செல்வி.ஆர்.ரோசி

விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - ஆர்.மனோஜ் குமார்-சமூகவலைதளம் -எம்.கே.முத்து, மகளிர் -திருமதி.வி.நிவேதா

காணை தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - எ.மணிகண்டன்,சமூக வலைதளம் - டி.குழந்தைவேலு,மகளிர் -திருமதி.பி.ஸ்ரீமதி

காணை மத்தியம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எஸ்.பூவராகவன், சமூக வலைதளம் என்.இளங்கோவன், மகளிர் -திருமதி.ஆர்.மாலதி

காணை வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -எம்.பி.சரவணன்,சமூக வலைதளம் - எஸ்.சந்தோஷ்குமார்,மகளிர் திருமதி.எம்.கலைமணி

விக்கிரவாண்டி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-பா.யுவராஜ், சமூகவலைதளம்- எ.முகமதுராஜா,மகளிர் - திருமதி. ஆர்.மாலதி

**திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி**

திருக்கோவிலூர்தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.குமரவேல், சமூக வலைதளம்-எஸ்.திருநாவுக்கரசு,மகளிர்- திருமதி.ஆ.நேத்ராவதி

திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- கே.விக்னேஷ், சமூகவலைதளம் - கு.விஜயரங்கம் மகளிர் -திருமதி.எஸ்.பிரியா

திருவெண்ணைய்நல்லூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- வி.நவீன்குமார்,சமூகவலைதளம்-எ.பார்த்தசாரதி,மகளிர் -செல்வி.இரா.குறிஞ்சி

முகையூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -டி.குரு,சமூகவலைதளம் -கே.ஜீவா,மகளிர் -செல்விஎஸ்.சுபஸ்ரீ

முகையூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.மோகன்தாஸ்,சமூக வலைதளம்,எம்.சரண்சிங்,மகளிர் -திருமதி. கே.ராஜகுமாரி

மணம்பூண்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - பி.ஆசைத்தம்பி,சமூக வலைதளம்-கே.சரவணன்,மகளிர்-திருமதி. எம்.அனிதா

திருக்கோவிலூர் நகர ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -பி.சத்தியநாராயணன், சமூகவலைதளம் - பி.குமாரசாமி, மகளிர் செல்வி.எம்.உஷாராணி

திருவெண்ணைய்நல்லூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - க.இனாயத்துல்லா,சமூகவலைதளம் - எம்.அய்யப்பன், மகளிர் - செல்வி.எஸ்.துர்கா

அரகண்டநல்லூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.அகமது ஷெரீப்,சமூக வலைதளம் - பி.சேகர்,மகளிர்-திருமதி. கே.சூர்யா

**அமைச்சர்**
**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

## தனியார் பங்களிப்புடன் விரைவில்

# ஏலகிரி - ஏற்காடு மலைகளில் ரோப் கார் அமைக்கும் பணி!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*திருப்பத்தூர், ஜூலை 1 -*

தனியார் பங்களிடப்புடன் ஏலகிரி மற்றும் ஏற்காடு மலைகளில் விரைவில் ரோப் கார் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் சேலம் ராஜேந்திரன், ஏலகிரி மலையில் நடைபெற்ற கோடை விழாவில் பங்கேற்று பேசுகையில் தெரிவித்தார்.



விழாவில் அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் பொற்கால நிர்வாகத்தை தந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய துணை கண்டத்தில் இருக்கிற அத்தனை மாநிலங்களும், மாநிலங்களில் இருக்கின்ற ஆட்சியாளர்களும் வியந்து பாராட்டுகின்ற அளவிற்கு ஒரு சிறப்பான பொற்கால ஆட்சியை தந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்று கின்ற திட்டங்கள், செயல்படுத்துகின்ற திட்டங்களை எல்லாம் மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற அளவிற்கும், மற்ற உலக நாடுகளில் இருக்கின்ற சில நாடுகள் பின்பற்றுகின்ற அளவிற்கு பல்வேறு திட்டங்களை சிறப்பான திட்டங்களை தொலை நோக்குப் பார்வையோடு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சர் அவர்களின் வழியில் பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எந்த பொறுப்பினை ஏற்றுக் கொண்டாலும் சிறப்பாக பல்வேறு பணிகளை நிறைவேற்றி, ஆற்றல் பெற்று அதன் மூலம் இந்த சமுதாயத்திற்கு பணியாற்றி வரக்கூடியவர். கடந்த முறை 2006 ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நமது அமைச்சர் அவர்களை உணவுத்துறை அமைச்சராக நியமித்து, அத்துறையில் 21 சீர் திருத்த ங்களை கொண்டு வந்து அவற்றையெல்லாம் நிறைவேற்றி தமிழ்நாட்டிலேயே சிறப்பான நிர்வாகத்தை உணவு துறையில் கொண்டு வந்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதி குழு தமிழ்நாட்டில் பொது விநியோகத்துறை பொது மக்களுக்கு எப்படி விநியோகிக்கப்படுகிறதோ அந்த முறையில் மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்ற அளவிற்கு முக்கிய தீர்ப்பை தந்தார்கள். இதற்கு முன்னதாக சென்னை மாவட்டத்தில் தான் குடும்ப அட்டைகள் தயாரிக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அமைச்சர் அவர்களே உணவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப அட்டைகள் தயார் செய்யப்பட்டு புதிதாக பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் பணியையும் நிறைவேற்றி தந்தார். மேலும் 150 குடும்ப அட்டைகளும் இருந்தாலும் கூட ஒரு நியாய விலை கடை வைக்கப்பட வேண்டும் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அனுமதியோடு அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி னார்கள். அதேபோல் அனை த்து நியாய விலை கடைகளிலும் துவரம் பருப்பு, பாமாயில் விநியோகம் செய்தது அமைச்சர் உணவுத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் தான்.

தற்போது பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் துறை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சராக பொறுப்பேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பாராட்டுதலை பெறக்கூடிய அளவில் சிறப்பாக பணியாற்று வருகிறார்.

இந்த நான்காண்டு காலத்தில் பல்வேறு பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். பொதுப்பணித்துறை சார்பில் கிண்டியில் பல்நோக்கு மருத்துவமனை குறித்த காலத்திற்கு முன்பாகவே மக்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது . மதுரையில் கலைஞர் நூலகத்தை விரைவாக கட்டி முடித்து மாணவர்களும் பொது மக்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் கன்னியாகுமரியில் கண்ணாடி பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, விரைந்து முடிக்கப்பட்டு பாலத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதேபோல் பல்வேறு தலைவர்களுக்கு சிலைகள், பல்வேறு திட்ட பணிகள், நெடுஞ்சாலைத்துறையில் பல்வேறு சாலைகள், குறிப்பிட்ட காலத்திற்குள் தரமான சாலைகளாக சர்வதேச சாலைகளாக அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சியில் இந்த சிறப்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் பணி ஆற்றி வருகிறார்கள்.

மேலும் ஏலகிரி மலை பொறுத்த வரையில் சுமார் 1100 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து அமைந்திருக்கு ஒரு சுற்றுலா தளமாக இயற்கை எழில் கொஞ்சுகின்ற சுற்றுலா தளமாக விளங்கி கொண்டிருக்கின்றது. ஏலகிரி மலையில் ஏழாம் நூற்றாண்டை சார்ந்த நடுக்கல் கண்டறியப்பட்டு அதில் திருப்பத்தூரில் பகைவர்கள் முற்றுகையிட்டபோது, காயல் ஊரைச் சேர்ந்த மலை பையன் என்ற வீரன் போரிட்டு மாண்டதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் மலை ஏற்றம் சாகச விளையாட்டுகள், அமைதியான சூழல் விரும்புவோருக்கு இது ஒரு சிறந்த சுற்றுலா தளமாக விளங்கி கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாது ஆண்டு முழுவதும் எளிமையான மிதமான காலநிலை இருக்கின்றனர் ஒரு சிறப்பு பெற்ற மலையாக ஏலகிரிமலை இருக்கிறது. ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு உகந்த இடமாக ஏலகிரி மலை திகழ்கிறது. இங்கே இருக்கின்ற புங்கனூர்ஏரி இந்த பகுதியில் இருக்கின்ற மக்களால் அமைக்கப்பட்ட ஒரு சிறப்பான ஏரியாக நமக்கு கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு சுற்றுலா திட்டங்கள் இந்த பகுதியில் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது.

ஏலகிரி மலையில் 2021-22 ஆம் ஆண்டு சுமார் ரூ.3 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 9 வகையான சாகச சுற்றுலா பணிகள், ஜிப் லைனிங்,பேராக் லைடிங், உட் ஹவுஸ் போன்ற இவையெல்லாம் அமைக்கப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு பயன்பெறும் வகையில் இந்த ஆட்சியில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதே போல் ஏரியில் படகு இல்லம், பல்வேறு பணிகள் 87 லட்சம் ரூபாய் மதிப்பில் கடைகள், அதேபோல் சுற்றுலாத்துறை அறிவிப்பின் படி ரூபாய் 10 கோடியில் ஏலகிரி மலைக்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு அறிவிக்கப்பட்டு இயற்கை பூங்கா, படகு இல்லம் இவையெல்லாம் சீர்படு த்துகிற வகையில் அந்த பணிகள் எல்லாம் நடைபெற்று வருகிறது. ஏலகிரி மலைக்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு இன்னும் கூடுதலாக பயன்பெறுகின்ற வகையில் முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு இந்த பகுதிக்கும் ஏற்காடு பகுதிக்கும் ரோப் கார் அமைக்கின்ற பணி தனியார் பங்களிப்போடு நிறைவேற்றுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பாக மகளிர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி கொண்டிருக்கின்றார். முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் சிறந்த நிர்வாகத்தை தந்து தொடக்கத்திலே குறிப்பிட்டதை போல ஒரு சிறப்பான ஆட்சி நிர்வா கத்தை தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்த ஆட்சி இன்னும் 25 ஆண்டு காலம் தொடர்ந்திட வேண்டும். எனவே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவு தருகின்ற வகையில் நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய ஆதரவை வழங்கி உறுதுணையாக இருக்க வேண்டும்


இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.



சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மேற்கு சட்டமன்றத் தொகுதி சேலம் வடக்கு தி.மு.க. ஒன்றியத்தில் ஓரணியில் தமிழ்நாடு தொகுதி பொறுப்பாளர் எஸ்.ராஜசேகர் தலைமையிலும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர் ரெயின்போ நடராஜன் முன்னிலையில் தேர்தல் பணி குழு வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.சி. தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்புக் குழுவுக்கு ஆலோசனை வழங்கி தி.மு.க. உறுப்பினர் படிவங்களை வழங்கினார். உடன் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தளவாய்பட்டி ராஜா இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மதுரை கே. தாவூது**
**ஜூலை 1 (2004)**



**மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**